SRI LANKA
histories that connect
සබැඳි ඉතිහාසය
இணைந்த வரலாறுகள்

# வரலாற்று வகுப்பறையில் காணப்படும் கட்புல காட்சித் திறன்கள்



COLLECTIVE FOR HISTORICAL DIALOGUE & MEMORY

EuroClio
Inspiring History and Citizenship Educators

SCOPE
Strengthening Social Cohesion and Peace in Sri Lanka

Co-funded by the European Union

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

Implemented by:
giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

# Acknowledgements


## Author

Iraj De Alwis

With special thanks to Shavindi Pieris and Johann Peiris (Collective for Historical Dialogue and Memory) for help with archival research and coordination.

## Published by

EuroClio - European Association of History Educators as part of the project Histories that Connect Sri Lanka II



## Copyright

CC BY 4.0



## To cite this publication:

De Alwis, I. (2025). Visual Skills in the History Classroom.
EuroClio - European Association of History Educators.

## Supported by

This publication was supported by the Strengthening Social Cohesion and Peace in Sri Lanka (SCOPE) programme. SCOPE is co-funded by the European Union and the German Federal Foreign Office and implemented by GIZ in partnership with the Government of Sri Lanka. The content of the publication does not represent the official position of the European Union, the German Federal Foreign Office, GIZ, or the Government of Sri Lanka.

# வரலாற்று வகுப்பறையில் காணப்படும் கட்புல காட்சித் திறன்கள்

இன்றைய காலத்தில் பெரும்பாலான மக்கள், எழுத்துமூலமாக தகவல்களை பெற்றுக்கொள்வதை விட கட்புல காட்சிப் படங்கள் மூலமாகவே அதிகளிலான தகவல்களைப் பெறுகிறார்கள். மக்கள் மத்தியில் காணப்படும் மாற்றத்துக்கு அமைவாக நமது கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும். மாணவர்கள் பெரும்பாலும் விளம்பரப் பலகைகள், தொலைக்காட்சித் திரைகள், தேர்தல் சுவரொட்டிகள், தாங்கள் பயன்படுத்து இலத்திரனியல் சாதனங்களின் வாயிலாக மீம்ஸ்கள் மற்றும் பல காட்சிப் படங்களின் தொகுப்புகளை பார்க்கிறார்கள். கண்ணால் பார்ப்பதை உண்மையென நம்பிடும் பலர் வாழும் சமூகத்தில் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். இந்நிலையில் காட்சிப் படத்தை கேள்வி கேட்காமல் உண்மையாக ஏற்றுக்கொள்ள அதிக வாய்ப்புள்ளது என்பதைக் காட்டுகிறது. மாணவர்கள் படிப்பதையும் கேட்பதையும் மதிப்பிடுவதற்கு நாம் கற்றுக்கொடுப்பது போல, அவர்கள் பார்க்கும் விடயங்களை பகுப்பாய்வு செய்யும் வகையில் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். காட்சி படங்களை பகுப்பாய்வு செய்யும் திறன்களை மாணவர்கள் மத்தியில் உருவாக்கும் வகையிலான கற்றல் செயற்பாடுகளுக்கான முன்மாதிரிகள் மற்றும் யோசனைகளைஇந்த வழிகாட்டி ஆசிரியர்களுக்கு வழங்குகிறது. அடிப்படையாக காட்சிப் படங்களை பிரித்து ஆய்வுசெய்யும் செயற்பாடுகளை ஆரம்பிப்போம். பொதுவான காட்சி நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்வோம். பின்னர் ஒரு காட்சிப் படத்தை உருவாக்கியவர், அந்த காட்சிப் படத்தின் வாயிலாக எவ்வாறாக அர்த்தத்தை முன்வைக்க முயற்சி செய்தார் என்பதைப் பார்ப்போம்.

### பொதுவாக கட்புல காட்சி பகுப்பாய்வு திறன்கள் ஏன் அவசியமாகின்றது?

**உயர்நிலை சிந்தனைத் திறன்கள்:** கட்புல காட்சிகளை பகுப்பாய்வு செய்யக் கற்றுக்கொள்வது மாணவர்களின் விமர்சன சிந்தனை மற்றும் குழுப்பணி திறன்களை மேம்படுத்த உதவுகிறது. பாரம்பரிய முறையில் எழுத்துமூல ஆவணங்களை பகுப்பாய்வு செய்வதை விட தற்கால கல்வியாளர்கள் பெரும்பாலும் காட்சிகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இந்தத் திறன்களை விரைவாக வளர்த்துக் கொள்கிறார்கள் என்று ஆராய்ச்சி காட்டுகிறது. காட்சி ஊடகம் இப்போது நாம் தகவல்களைப் பெறும் முக்கிய வழியாக இருக்கலாம். திரைப்படங்கள் அல்லது காட்சித் திரைகள் பற்றிய அன்றாட விவாதங்களில் மாணவர்கள் வகுப்பில் கற்றுக்கொண்ட காட்சி பகுப்பாய்வு திறன்களை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். காட்சித் திறன்களில் பயிற்சி அளிப்பது வாய்மொழி மற்றும் எழுத்துத் திறன்களை மேம்படுத்தும் என்றும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. வெவ்வேறு கற்றல் பாணிகளை ஈடுபடுத்துவதால் மாணவர்களிடையே பரந்த அளவிலான மற்றும் ஆழமான சிந்தனையை ஊக்குவிக்க முடியும்.

**ஊடக எழுத்தறிவை மேம்படுத்துதல்:** இன்றைய பெரும்பாலான கல்விச் செயற்பாடுகள் வரலாற்றுப் பாடங்களை பகுப்பாய்வு செய்வதில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக வரலாறு, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்கள் முக்கியமாக மாணவர்களுக்கு எழுத்துமூல விடயங்களைப் புரிந்துகொள்ளவும் விமர்சன ரீதியாக சிந்திக்கவும் கற்றுக்கொடுக்கின்றன. நீண்ட காலமாக கற்றல் செயற்பாடுகளில் எழுத்துமூல தகவல்கள் முக்கிய தகவல்தொடர்பு வடிவமாக இருந்து வருவதால், இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது. இருப்பினும், பல ஆசிரியர்கள் ஒரு பெரிய மாற்றத்தைக் கவனித்துள்ளனர்: கட்புல காட்சி ஊடகங்கள் இப்போது எழுத்துமூல உரைகளை விட அதிகப்படியான தகவல்களை அளிப்பதோடு, கற்றல் செயற்பாடுகளின் போது மாணவர்கள்

மத்தியில் பல்வேறுபட்ட கருத்துகள் மற்றும் யோசனைகளை வழங்குகின்றன. கட்புல காட்சி மூலமான செய்திகள் நிறைந்த உலகில், மாணவர்கள் தகவலறிந்த குடிமக்களாக மாற இந்த காட்சிகளுக்குப் பின்னால் உள்ள நோக்கம் மற்றும் ஆய்வு செய்யும் முறைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, வகுப்பறையில் காட்சி பகுப்பாய்வைச் கற்றல் செயற்பாடுகளில் சேர்ப்பது அவசியமாக பார்க்கப்படுகிறது.

**வரலாற்று முறையைப் மிகவும் ஆழமாக புரிந்துகொள்வது:** வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் விளக்கத்தைக் கற்றுக்கொள்வது மட்டுமல்ல இது முதன்மை ஆதாரங்களின் ஆய்வின் அடிப்படையில் தொடர்ச்சியான விளக்கம் மற்றும் விவாத செயல்முறையாகும் என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவும் ஒரு சிறந்த வாய்ப்பாக இந்த இடம் செயல்படுகிறது. பெரும்பாலும் அவற்றின் அர்த்தங்களை வெளிப்படையாகக் கூறும் உரை ஆதாரங்களைப் போலன்றி, படங்கள் தெளிவற்றதாக இருக்கலாம். ஓவியம், சுவரொட்டி அல்லது கார்ட்டூன் போன்ற ஒரு வரலாற்றுப் படத்தை மாணவர்கள் சந்திக்கும் போது, அவை தவிர்க்க முடியாமல் வெவ்வேறு விளக்கங்களை உருவாக்கும். ஒரு ஆசிரியர் இந்த மாறுபட்ட கண்ணோட்டங்களைப் பயன்படுத்தி மாணவர்களிடையே விவாதங்களை வளர்க்கலாம், இதன் மூலம் வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் விளக்கங்கள் குறித்து எவ்வாறு உடன்படவில்லை என்பதை மாதிரியாக மாணவர்களுக்கு எடுத்துக் காட்டலாம். மேலும், ஓவியங்கள், புகைப்படங்கள், சிற்பங்கள், மட்பாண்டங்கள் மற்றும் கருவிகள் மற்றும் ஆயுதங்கள் உட்பட பல முதன்மை ஆதாரங்களுக்கு காட்சி பகுப்பாய்வு திறன்கள் தேவைப்படுகின்றன. காட்சி மூலமாக எழுத்தறிவானது, ஒரு வரலாற்று மாணவரின் ஆய்வுக்கான கருவித்தொகுப்பின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றது.

**உணர்ச்சி பூர்வ அனுகுமுறை மற்றும் ஈடுபாட்டை வளர்த்தல்:** கடந்த கால அனுபவங்களுடன் ஒரு உறுதியான தொடர்பை வழங்குவதிலும், மாணவர்களிடையே பச்சாதாபத்தை வளர்ப்பதிலும் கட்புல காட்சி மூலங்கள் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன. குறித்த காட்சிகள் பெரும்பாலும் உணர்ச்சிபூர்வமான எதிர்வினைகளை மாணவர்களிடத்தில் தூண்டுகிறது. குறித்த காட்சி மூல செயற்பாடுகள் இது வகுப்பறையில் மாணவர்கள் மத்தியில் கற்றல் சார்ந்த ஈடுபாட்டை மேம்படுத்தும். வரலாற்றுக் கல்வியாளர்கள் மாணவர்களின் ஆர்வத்தைப் பிடிப்பதில் அடிக்கடி சவால்களை எதிர்கொள்கின்றனர், இந்த செயற்முறை மூலமாக மாணவர்களின் ஈடுபாட்டை பயனுள்ள கற்பித்தலின் ஒரு முக்கிய அங்கமாக ஆக்குகின்றனர். காட்சிப் பொருட்கள் மூலமான செயற்முறைகளில் உணர்ச்சிபூர்வமான பதிலை மாணவர்கள் மத்தியில் உருவாக்குவதன் மூலம், ஆசிரியர்கள் அவர்களின் உணர்வுகளுக்குப் பின்னால் உள்ள காரணங்களை பகுப்பாய்வு செய்ய ஊக்குவிக்கலாம். காட்சிப் படங்கள் அவர்களின் உணர்ச்சிகளை எவ்வாறு பாதித்தன என்பதை ஆராயவும் ஊக்குவிக்கலாம். குறிப்பாக ஏனைய சக மாணவர்களுடன் தனது கருத்துகளை பரிமாறிக்கொள்வதன் மூலம் மாறுபட்ட எதிர்வினைகளைப் பற்றி விவாதிக்கவும் தூண்டலாம். இந்த அணுகுமுறை கற்றல் மற்றும் சார்ந்த புரிதலை ஆழப்படுத்துவது மட்டுமல்லாமல் விமர்சன ரீதியாக சிந்திக்கவும் மற்றும் அதுதொடர்பான உரையாடலையும் ஊக்குவிக்கிறது.

**கட்புலக் காட்சித் தொடர்பு சார்ந்த திறன்களை வளர்ப்பது:** கட்புலக் காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் மிகவும் பரவலாகி வருவதால், மாணவர்கள் தங்கள் காட்சி தொடர்பு சார்ந்த திறன்களை மேம்படுத்திட வேண்டும். படைப்பாளிகள் எவ்வாறு பயனுள்ள காட்சி படைப்புகளை உருவாக்குகிறார்கள் என்பதை பகுப்பாய்வு செய்யக் கற்றுக்கொள்வதன் மூலம், மாணவர்கள் தங்கள் தொடர்பு திறன்களை மேம்படுத்திட முடியும். தொழில்நுட்ப பொருளாதாரத்தில் பல்வேறு தொழிற்துறைகளில் இந்தத் திறன் மிகவும் அடிப்படையாக திறனாக பார்க்கப்படுவதால், குறித்த திறன் சார்ந்த தொழிற்துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கக்கூடும்.

## வரலாற்று ஆய்வுடன் கட்புலக் காட்சித் திறன்கள் எவ்வாறு தொடர்புபடுகின்றது?

வரலாற்றுப் பாடத்தை கற்றும் மாணவர்கள் இரண்டு அடிப்படைத் திறன்களில் தேர்ச்சி பெற வேண்டும்:
கடந்த காலத்தின் எஞ்சியவற்றை எவ்வாறு பகுப்பாய்வு செய்வது, இது முதன்மை ஆதாரங்களாகும். வரலாற்றாசிரியர்கள் அல்லது கலைஞர்கள் கடந்த காலத்தைப் பற்றி கூறிய கூற்றுக்களை எவ்வாறு பகுப்பாய்வு செய்வது, இது இரண்டாம் நிலை ஆதாரங்களாகும்.

மேலும் ஆய்வுக்கு உட்படுத்துவதற்கு கட்புல காட்சிப் பகுப்பாய்வுத் திறன்கள் அவசியமாக அமையாலாம். வரலாற்று ஆய்வுகளின் போது பயன்படுத்தும் சில முதன்மை ஆதாரங்களுக்கு எடுத்துக்காட்டாக வரலாற்று சார்ந்த ஓவியங்கள், புகைப்படங்கள் மற்றும் கார்ட்டூன்கள் அமைகின்றது. இதற்கிடையில், வரலாற்றுத் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவை தொழில்நுட்ப ரீதியாக அமைவதோடு, அவை இரண்டாம் நிலை ஆதாரங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றது, ஏனெனில் அவை கடந்த காலத்தைப் பற்றிய படைப்பாளரின் பார்வையை நமக்கு உணர்த்த முயற்சிக்கின்றன. இந்த ஆசிரியர் வழிகாட்டியானது, முதன்மை ஆதாரங்களின் பகுப்பாய்விற்கான கட்புல காட்சித் திறன்களை வளர்ப்பதில் கவனஞ் செலுத்துகிறது. ஆனால் மாணவர்கள் இந்த தொழில்நுட்பத் திறன்களில் சிலவற்றைப் புரிந்துகொண்டு, அவர்கள் பார்க்கும் காட்சிப் படங்களை பகுப்பாய்வு செய்யும் பழக்கத்தை கற்றல் செயற்பாடுகளில் கொண்டு வந்ததும், கார்ட்டூன் திரைப்படங்கள் அல்லது வரலாற்றுத் திரைப்படம் போன்ற இரண்டாம் நிலை ஆதாரங்களை விமர்சன ரீதியாக ஆய்வு செய்யும் பழக்கத்தை மாணவர்கள் மத்தியில் படிப்படியாக ஊக்குவிக்கலாம்.

## முதன்மை ஆதாரங்களை பகுப்பாய்வு செய்வதற்கான அடிப்படை திறன்கள்

கட்புல காட்சித் திறன்களைக் கற்பிக்கும் செயல்முறையை எளிமைப்படுத்த, கற்றல் செயற்பாடுகளில் வரலாற்றின் முதன்மை ஆதாரங்களை ஆய்வுக்கு உட்படுத்தலாம். மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தை கற்கும் பரந்த திறன் தொகுப்பில் இவ்வகையான ஆய்வு செயற்பாட்டினை உள்ளடக்கலாம். ஒரு உத்தியோகபூர்வ கடிதம், அரசாங்க ஆவணம், ஒரு உரை, ஒரு புகைப்படம் அல்லது அரசியல் கார்ட்டூன் என எந்தவொரு முதன்மை ஆதாரத்தை ஆய்வு செய்வதாக இருந்தாலும், ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் பின்வருமாறு:

**தோற்றம் -** ஒரு மூலத்தை உருவாக்கியவர் யார் என்பதை அறிவது முக்கியம், ஏனெனில் மூல ஆதாரத்தை உருவாக்கியவரின் பின்னணி, அவரது நோக்கம் மற்றும் குறித்த ஆதாரத்தின் உள்ளடக்கத்தை நாம் புரிந்துகொள்வதன் மூலமாக குறித்த ஆதாரத்தின் உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை அடையாளங் காணலாம். இந்த காரணிகளை நாம் அடையாளங் காண்பதன் ஊடாக ஆதாரத்தின் உள்ளடக்கத்தையும், அதன் வரலாற்று சூழலையும் நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

**வரலாற்று சூழல் -** ஆதாரத்தை உருவாக்கிய காலகட்டத்தில் என்னென்ன நிகழ்வுகள் நடந்தது என்பதில் அவதானஞ் செலுத்த வேண்டும். குறித்த வரலாற்று ஆதாரமானது, தொடர்புபடும் வரலாற்று நிகழ்வுகள் மற்றும் பிரச்சனைகள்

போன்றவற்றை ஆய்வு செய்வதன் மூலமாக அடையாளங் காண முடியும். சிலசமயங்களில் அவை நேரடியாகக் குறிப்பிடாமல் இருக்கலாம், ஆனால் மூலத்தைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும்.

**கண்ணோட்டம்** - ஆதாரத்தை உருவாக்கியவரின் நிலைப்பாடு என்ன? எவ்வாறான விடயங்கள் அவரது கருத்துக்களை வடிவமைக்கக்கூடிய காரணிகளாக அமைந்தன- அவர்களின் வயது, பாலினம், கலாச்சார பின்னணி அல்லது சமூக அந்தஸ்து மற்றும் குறித்த மூலாதார படைப்பாளியின் நிலைப்பாட்டில் இருந்த ஏனையவர்கள் எவ்வாறான நம்பிக்கையை கொண்டிருந்தார்கள் என்பது பற்றி நமக்குத் தெரிந்ததைப் பயன்படுத்தி, மூலாதார படைப்பாளி எப்படி உணர்ந்திருக்கலாம் என்பது பற்றிய தகவலறிந்த யூகத்தை உருவாக்க முயற்சிக்கும்போது இதற்கு "வரலாற்று பச்சாதாபம்" (historical empathy) தேவைப்படுகிறது.

**பார்வையாளர்கள்** - சில நேரங்களில் கடிதத்தை பகுப்பாய்வு செய்வது போன்ற சில சந்தர்ப்பங்களில் பார்வையாளர்களை அடையாளம் காண்பது நேரடியானதாகவும் எளிதாகவும் அமையலாம். இருப்பினும், ஏனைய சந்தர்ப்பங்களில் பகுப்பாய்வு செயற்பாடுகளுக்காக அதிக முயற்சி மற்றும் தகவலறிந்து ஊகிக்கும் திறன் தேவைப்படலாம். குறிப்பாக மூலஆதாரத்தின் வகை, அதன் படைப்பாளர், அது உருவாக்கப்பட்ட நேரம் மற்றும் அதன் கண்ணோட்டத்தை ஆராய்வதன் ஊடாக குறித்த ஆதாரத்தின் நோக்கம் எவ்வகையான பார்வையாளர்களுக்காக உருவாக்கப்பட்டது என்பதை ஆய்வு மூலமாக தீர்மானிக்க உதவும்.

**நோக்கம்** - ஒரு பொருள் அல்லது செயலுக்குப் பின்னால் உள்ள நோக்கத்தைப் புரிந்துகொள்வது பெரும்பாலும் நேரடியானதாக இருக்கும். உதாரணமாக வரலாற்றுடன் தொடர்புடைய கருவிகள் அல்லது ஆயுதங்களைப் ஆய்வு செய்வது எளிதான செயலாகும். இருப்பினும், கலைப் படைப்புகள் அல்லது எழுதப்பட்ட நூல்களை பகுப்பாய்வு செய்யும் போது இது மிகவும் சிக்கலானதாகிவிடும். இந்த சூழ்நிலைகளில், படைப்பாளரின் நோக்கம் குறித்து தகவலறிந்த யூகத்தை உருவாக்க, தோற்றம், சூழல், கண்ணோட்டம் மற்றும் நோக்கம் கொண்ட பார்வையாளர்களைப் பற்றிய நமது புரிதலைச் சார்ந்து இருக்கிறோம்.

மாணவர்கள் வரலாற்று பாடத்தில் அதிக தேர்ச்சி பெற அடிப்படை பகுப்பாய்வு திறன்களை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். எனவே, ஒவ்வொரு பாடத் திட்டமும் மாணவர்களின் கற்றல் பயணத்தின் ஒரு பகுதியாக இந்த அடிப்படை பகுப்பாய்வுக் குறிப்பை இணைக்குமாறு பரிந்துரைக்கிறோம். ஒவ்வொரு பாடத்திலும் இந்த கூறுகளுக்கான எளிய அட்டவணையை மாணவர்கள் நிரப்புவதே ஒரு பயனுள்ள அணுகுமுறையாகும். பாடங்கள் பல்வேறு வகையான காட்சி ஆதாரங்களை அறிமுகப்படுத்தினாலும், இந்த முறை மாணவர்கள் அடிப்படை திறன்களைப் பயிற்சி செய்து தேர்ச்சி பெற உதவுகிறது. கூடுதலாக, காலப்போக்கில் மாணவர்களின் முன்னேற்றத்தை ஒப்பிட்டு மதிப்பிடுவதற்கான நேரடியான கருவியை இது ஆசிரியர்களுக்கு வழங்குகிறது.

| | |
|---|---|
| **தோற்றம்** | |
| **வரலாற்று சூழல்** | |
| **கண்ணோட்டம்** | |
| **பார்வையாளர்கள்** | |
| **நோக்கம்** | |

இந்த அட்டவணையை திறம்பட பூர்த்திசெய்ய மாணவர்கள் தாங்கள் ஆராயும் மூல ஆதாரத்தின் வகையைப் பொறுத்து பல்வேறு திறன்களை கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். எழுத்துமூல ஆதாரங்களைப் பொறுத்தவரை, மாணவர்கள் மீண்டும் மீண்டும் வாசிக்கும் திறமை, சொல்லாட்சிக் கேள்விகள் மற்றும் கதை அமைப்பு போன்ற இலக்கிய நுட்பங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். மாறாக, படங்கள் போன்ற கட்புலக் காட்சி மூலாதாரங்களை பகுப்பாய்வு செய்யும் போது, பார்வையாளர்கள் காட்சிகளை எவ்வாறு விளக்குகிறார்கள் என்பதைப் பாதிக்க, படைப்பாளிகள் பயன்படுத்தும் நுட்பங்களை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வழிகாட்டியானது, குறிப்பாக அரசியல் கார்ட்டூன்களில் பயன்படுத்தப்படும் காட்சி நுட்பங்களில் கவனம் செலுத்துகிறது, அவை ஆன்லைனில் எளிதாகக் கிடைக்கும் பொதுவான காட்சி மூலமாக அமைகிறது. ஆசிரியர்கள் இந்த கார்ட்டூன்களை தங்கள் பாடங்களில் எளிதாக இணைக்க முடியும், குறிப்பாக நவீன இலங்கை வரலாற்றைப் பற்றி விவாதிக்கும்போது. கூடுதலாக, இந்த வழிகாட்டியுடன் ஒரு ஆன்லைன் தொகுப்பு உள்ளது, இது ஒரு பயனுள்ள ஆதாரமாக

## அரசியல் கார்ட்டூன்கள் மூலம் காட்சி பகுப்பாய்வை கற்பிக்க ஒரு பாடத் திட்டத்தை உருவாக்குதல்

வரலாற்று வகுப்பில் அரசியல் கார்ட்டூன்கள் மூலம் கட்புலக் காட்சி பகுப்பாய்வை கற்பிப்பதற்கான பாடத் திட்டத்தை உருவாக்குவது அவசியமாகும். இந்த குறிப்பிட்ட வகை படைப்பாளிகள் பயன்படுத்தும் வழக்கமான நுட்பங்களைப் புரிந்துகொள்ளும் நோக்குடன் பின்னணி ஆராய்ச்சியை நடத்துவதன் மூலம் ஆய்வின் முதற்கட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். உதாரணமாக, ஒரு வரலாற்று ஓவியத்தை பகுப்பாய்வு செய்ய மாணவர்களுக்கு கற்பிக்கும் போது, ஓவியர்கள் பயன்படுத்தும் நுட்பங்களைப் பற்றி மாணவர்கள் விவாதிப்பது முக்கியமாகும். இதேபோல், அரசியல்

கார்ட்டூன்களைப் பொறுத்தவரை, கார்ட்டூனிஸ்டுகள் பயன்படுத்தும் கருவிகள் மற்றும் முறைகள் பின்வருமாறு:)

1) கேலிச்சித்திரம் - (Caricature)
2) அடையாளச் சின்னம் - (Symbol)
3) (கார்ட்டூனுக்குள்) லேபிளிடுதல் - Labelling (within the cartoon)
4) பேச்சு - (Speech)
5) (கார்ட்டூனின் சட்டகத்திற்கு வெளியே) லேபிளிடுதல் - Labelling (outside the frame of the cartoon)

மேலும், பின்வரும் இலக்கிய ரீதியான கருவிகள் பொதுவானதாக இருக்கலாம்:

1) உருவக்கதை (Allegory)
2) உருவகம் (Metaphor)

பாடத் திட்டங்கள் என்றால் என்ன, அவை ஒரு காட்சிப் படத்தில் அர்த்தத்தை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய இரண்டு பாடத் திட்டங்கள் பின்வருமாறு.

## மாதிரி பாடத் திட்டங்கள்

இந்த மாதிரி பாடத் திட்டங்களின் கொண்டிருக்கும் வளங்கள் பின்வருமாறு:

1. படிப்படியான பாடத் திட்டம்
2. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதாரங்கள்
3. காட்சி பகுப்பாய்வு திறன்களைப் பயிற்றுவிப்பதற்கான கேள்விகளைக் உள்ளடக்கிய செய்முறைப் படிவங்கள்
4. அடிப்படையான முதன்மை மூலாதார பகுப்பாய்வு திறன்களை மையமாகக் கொண்ட ஒரு எளிய அட்டவணை

பின்வரும் பாடத் திட்டமானது, யு மற்றும் டீ என அடையாளப்படுத்தும் இரு கார்ட்டூன்கள் பயன்படுத்துகிறது. கார்ட்டூன்கள் இரண்டும் ஒப்பீட்டளவில் எளிமையான காட்சி அமைப்பைக் கொண்டிருப்பதாலும், கார்ட்டூனின் அடிப்படை கூறுகளை உள்ளடக்கியதாலும் மீண்டும் மீண்டும் விவாதிக்கக் கூடிய கூறுகளைக் கொண்டிருப்பதாலும், கார்ட்டூன்கள் ஒன்றாக ஒப்பீட்டளவில் வைக்கப்படும் போது அவை சமகால பொருத்தத்தைக் கொண்ட எளிய வரலாற்று கேள்விகளை எழுப்புவதாலும் இது ஒரு நல்ல தொடக்க கல்விச் செயற்பாடாக பார்க்கப்படுகிறது.
பாடத் திட்டம் மீண்டும் மீண்டும் நிகழும் பணிகளின் ஓட்டத்தை பரிந்துரைப்பதால், இப்பாடத்திட்டம் ஆய்விற்கான திறன்களை படிப்படியாக முன்னேற்றிடும். பாடத்திட்டத்தின் ஓட்டத்தை நிர்ணயிக்கும் முக்கிய அம்சங்களை ஆசிரியர் விளக்க வேண்டும். கார்ட்டூனில் காணப்படும் குறிப்பிட்ட அம்சத்தைப் அவதானிக்கும்படி மாணவர்களை ஊக்குவிப்பது மற்றும் அனைத்து மாணவர்களும் விவாதத்தைப் பின்பற்றுகிறார்களா என்பதை உறுதி செய்வதும், ஒரு சுருக்கமான விவாதத்திற்கு மாணவர்களை திரும்புவதும் ஆசிரியரின் பொறுப்பாகும். இந்த கட்டத்தில், மாணவர்கள் ஆய்வுகளுக்கான செயன்முறை படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பாக மாணவர்கள், ஏனைய மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு ஒரு ஜோடி-பகிர்வு நுட்பத்தை செயல்படுத்துவது பயனுள்ளதாக

இருக்கும். இறுதியாக, மாணவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கிறார்கள், குறித்த எழுத்துமூல பதிவுகள் ஒருமித்த தன்மையை கொண்டிருப்பதை நீங்கள் அவதானிக்கலாம்.

இந்த பாடஅலகானது 1956ஆம் ஆண்டும் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் வரையப்பட்ட அரசியல் கார்ட்டூன்களில் கவனம் செலுத்துகிறது, அந்த ஆண்டு முக்கியமான தேர்தலுடன் தொடர்புடையதாக அவை தேர்ந்தெடுக்கப்பட்டன. 9 அல்லது 11 ஆம் வகுப்பு வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் இரண்டும் 1956 தேர்தல்களை உள்ளடக்கியதால், ஆசிரியர்கள் இதை பயனுள்ள அலகாகவும், பயிற்சிக்கான அலகாகவும் பயன்படுத்தலாம். இந்த பாடப்புத்தகங்கள் குறித்த அரசியல் சூழலை பாதித்த முக்கிய பிரச்சினைகள் மற்றும் பிற்காலங்களில் அரசாங்கங்களின் கொள்கை மாற்றங்களைப் பற்றி விவாதிக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட கார்ட்டூன்கள் இந்த வரலாற்று சம்பவத்தின் பல்வேறு அம்சங்களை எடுத்துக் காட்டுகின்றன மற்றும் மாணவர்களின் காட்சி பகுப்பாய்வு திறன்களை வளர்க்கக்கூடிய ஒரு பாடமாக ஆசிரியர்கள் இப்பாடத்தை முன்னெடுக்கலாம்.

இந்த கார்ட்டூன்களுடன் கூடிய மூலாதார சேகரிப்பை ஹிஸ்டோரினா தளத்தின் வாயிலாக அணுகலாம்: https://historiana.eu/partners/histories-that-connect-sri-lanka

குறிப்பு: இந்தத் தேர்தலின் சர்ச்சைக்குரிய தன்மை மற்றும் இன மோதலில் குறித்த சம்பவம் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க தாக்கத்தை கருத்தில் கொண்டு, ஆசிரியர்கள் தங்களுக்கு வசதியாக இருக்கும் அளவுக்கு தலைப்பில் ஈடுபட அதிகாரம் அளிக்கும் வகையிலான பாடஅலகொன்று கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த வடிவமைப்பு அத்தகைய சிக்கலான பிரச்சினையை ஆராய்வதிலிருந்து எழக்கூடிய அர்த்தமுள்ள உரையாடல்கள் மற்றும் விவாதங்களை ஊக்குவிக்கும்.

# பாடத் திட்டம் 1 : பகுதி A (ஒரு மணி நேரம்)

இந்தப் பாடத்தில், ஆசிரியர் மாணவர்களுக்கு மூன்று முக்கிய யோசனைகளை அறிமுகப்படுத்துவார்: கார்ட்டூன்களைப் புரிந்துகொள்வது, கேலிச்சித்திரங்கள் மற்றும் சின்னங்களைப் பயன்படுத்துதல், கார்ட்டூன்கள் குறித்த நமது பார்வைகளை வடிவமைக்க கார்ட்டூனிஸ்டுகள் இந்த கூறுகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆசிரியர் விளக்குவார்.

## திறன் 1: கட்டமைப்பைப் புரிந்துகொள்ளல்

#### 1வது படிமுறை : பகுப்பாய்விற்குத் தயாராகுதல்

மாணவர்கள் 1வது கேள்விக்கு தாங்களாகவே பதிலளிக்குமாறு கூறுங்கள். ஒரு மூலத்தின் தலைப்பு வழங்கும் அடிப்படை விவரங்களை அவதானிக்கச் செய்வதற்கு மாணவர்களை ஊக்குவிக்கவும்.

**2வது படிமுறை 2: தனித்தனி கூறுகளைக் குறிப்பிடுதல்**

தலைப்புகள் மற்றும் படத்தின் கீழ் காணப்படும் குறிப்புகளை படிக்காமல் மூலப்படம் யு ஐ உன்னிப்பாகப் அவதானிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள். 2வது கேள்விக்கான கார்ட்டூனில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் மற்றும் பொருட்களை மாணவர்கள் பட்டியலிட்டு செயற்முறை படிவத்தில் குறிப்பிட வேண்டும். இந்த பயிற்சியில் மாணவர்கள் விவரங்களுக்கு கவனம் செலுத்தவும். அத்துடன் குறித்த விவரங்கள் வெவ்வேறு பகுதிகள் எவ்வாறான அர்த்தத்தை உருவாக்குகின்றன என்பதைப் பார்க்கவும் உதவுகிறது.

**3வது படிமுறை : கட்டமைப்பை புரிந்துகொள்ளல்:**

யானை சவாரி செய்யும் உருவப்படத்தின் மையத்தில் இருப்பதைக் குறிப்பிட்டு அடையாளப்படுத்தவும். கார்ட்டூனின் ஒட்டுமொத்த செய்தியுடன் தொடர்புடைய சித்தரிக்கப்பட்ட உருவத்தின் தாக்கங்கள் குறித்த விவாதத்தில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள். கீழ் பகுதியில் உள்ள கதாபாத்திரங்களின் தலைகளுடன் தொடர்புடைய உருவத்தின் நிலையை பகுப்பாய்வு செய்ய மாணவர்களை ஊக்குவிக்கவும். இந்த உருவங்களின் முக்கியத்துவம் குறித்து எவ்வாறான நுண்ணறிவுகளைப் பெற முடியும்? ஒரு கார்ட்டூனுக்குள் இடத்தின் அமைப்பை பகுப்பாய்வு செய்வது அதனை உருவாக்கும் கலைஞருக்கு ஒரு செய்தியை வெளிப்படுத்த ஒரு சிறந்த வழியாகும்.

## திறன் 2: கேலிச்சித்திரத்தைப் புரிந்துகொள்ளல்

**1வது படிமுறை: கேலிச்சித்திரத்தை அடையாளங்காணல்**

வழங்கப்பட்டுள்ள வரையறைகளைப் பயன்படுத்தி, கேலிச்சித்திரம் என்றால் என்ன என்பதை மாணவர்களுக்கு விளக்குவதன் மூலம் இச்செயற்பாட்டை ஆரம்பிக்கவும். குறிப்பாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் படத்துடன் யானை மீது சவாரி செய்யும் உருவத்தின் படத்தை அவர்களுக்குக் காட்டுங்கள். புகைப்படத்துடன் ஒப்பிடும்போது திரு. பண்டாரநாயக்கவின் தோற்றத்தை மிகைப்படுத்தும் வகையில் கார்ட்டூனில் உள்ள அம்சங்களை அடையாளம் காண மாணவர்களை ஊக்குவிக்கவும்.இந்த மிகைப்படுத்தல்கள் கதாபாத்திரத்தை எவ்வாறு அடையாளம் காணக்கூடியதாகவும் நகைச்சுவையாகவும் ஆக்குகின்றன என்பதைப் பற்றி விவாதிக்கவும். இறுதியாக, இந்த குணாதிசயம் நகைச்சுவையாக இருக்கும்போது ஏன் உருவத்தை அடையாளம் காணக்கூடியதாக ஆக்குகிறது என்பதற்கான சுருக்கமான விளக்கத்தை எழுத மாணவர்களை ஊக்குவிக்கவும்..

**2வது படிமுறை : ஒரு படத்தின் பின்னணி**

இந்த கட்டத்தில், மாணவர்களை சற்று விமர்சன ரீதியாக சிந்திக்க ஊக்குவிக்கவும். கார்ட்டூன் வெளியிடப்பட்ட ஆண்டை ஆய்வு செய்யுமாறு மாணவர்களை கேட்டுக்கொள்ளுங்கள் மேலும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் 1956 ஆம் ஆண்டு பற்றி அவர்களுக்குத் தெரிந்தவற்றைப் பகிர்ந்து கொள்ளுமாறு ஊக்குவித்து 4வது கேள்விக்கு பதிலளிக்கச் சொல்லுங்கள்.

கார்ட்டூன்களில் கேலிச்சித்திரம் என்பது பெரும்பாலும் ஒரு நபர் அல்லது குழுவின் தனித்துவமான அம்சங்கள் அல்லது பண்புகளை மிகைப்படுத்தி அடையாளம் காணக்கூடிய மற்றும் பெரும்பாலும் நகைச்சுவையான சித்தரிப்பை உருவாக்குவதை உள்ளடக்குகிறது. இந்த மிகைப்படுத்தல்களில் முக அம்சங்கள், உடல் விகிதாச்சாரங்கள் அல்லது சைகைகள் போன்ற உடல் பண்புகளும் அடங்கும். ஒரு கேலிச்சித்திரம் பயனுள்ளதாக இருக்க, அது எளிதில் அடையாளம் காணக்கூடியதாக இருக்க வேண்டும். ஒரு நபர் அல்லது குழுவுடன் தொடர்புடைய முக்கிய அம்சங்களை நீங்கள் அடையாளம் கண்டவுடன், இந்த பண்புகள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் கார்ட்டூன்களில், வெவ்வேறு கலைஞர்களால் உருவாக்கப்பட்டாலும் கூட, ஒரே மாதிரியாக இருப்பதை நீங்கள் அவதானிப்பீர்கள். இந்த ஒற்றுமை எந்தவொரு மாணவரும் அந்தக் காலத்தின் கேலிச்சித்திரங்களைப் பற்றிய சிறந்த புரிதலை வளர்த்துக் கொள்ள அனுமதிக்கிறது. கூடுதலாக, இந்த மிகைப்படுத்தல்கள் கார்ட்டூனிஸ்டுகள் சிக்கலான கருத்துக்கள் அல்லது விமர்சனங்களை விரைவாகவும் திறமையாகவும் ஆய்வு செய்ய உதவுகின்றன. கேலிச்சித்திரம் வரையப்படும் நபர்களைப் பற்றி அறிமுகமில்லாத பார்வையாளர்களுக்கு கூட. கேலிச்சித்திரம் வரைபவர்கள் அரசியல் பிரமுகர்கள், பொது நபர்கள் அல்லது சமூகக் குழுக்களின் குறைபாடுகள், அவர்களின் கதாபாத்திரங்களின் சர்ச்சைக்குரிய அம்சங்கள் அல்லது அவர்களின் நடத்தை அல்லது சித்தாந்தங்களில் உள்ள முரண்பாடுகளை அடையாளப்படுத்தி காண்பிப்பதன் மூலம் கேலி செய்ய அனுமதிக்கிறது.

## திறன் 3: சின்னங்களைப் புரிந்துகொள்ளல்

பாடத்தின் இந்தப் பகுதியில், கார்ட்டூனிஸ்ட் கார்ட்டூன் மூலம் எவ்வாறு செய்தியை அனுப்புகிறார் என்பதை மாணவர்கள் ஆராய்வார்கள்.

**1வது படிமுறை:** பண்டாரநாயக்க கார்ட்டூனில் சித்திரத்தின் என்ன அணிந்துள்ளார் மற்றும் என்ன செய்கிறார் என்பதை விவரிக்க மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலம் குறித்த பாடத்திட்டத்தை ஆரம்பிக்கவும். யானை சவாரி செய்வதோடு. அவர் முல்-அந்துமா எனப்படும் ராஜ அலங்காரத்தில் இருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும். கொண்டாட்டம், ஆடம்பரம் மற்றும் வெற்றி போன்ற அர்த்தங்களை மாணவர்கள் பரிந்துரைக்கலாம். ஒரு சின்னம் என்றால் என்ன, கண்டி இராசதானி காலப்பகுதிக்கு ஏற்ற் ஆடை மற்றும் யானை மீதான பவணி போன்ற விடயங்கள் எவ்வாறான கருத்துகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பதை விளக்குங்கள். கார்ட்டூனிஸ்ட்டை ஒரு கலைஞராக, ஒரு ஆசிரியரைப் போலவே பார்க்க மாணவர்களை ஊக்குவிக்கவும், கார்ட்டூனிஸ்ட் என்ன செய்தியை தெரிவிக்க முயற்சிக்கிறார் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

**2வது படிமுறை:** திரு. பண்டாரநாயக்க மற்றும் குறித்த தேர்தல் பற்றி கார்ட்டூனிஸ்ட் இந்த சின்னத்தின் மூலம் என்ன விடயத்தை பரிந்துரைக்கிறார் என்பதை விளக்கும் வகையில் மாணவர்கள் 5 ஆம் கேள்விக்கு பதிலளிக்க வேண்டும், கார்ட்டூனுக்கு பின்னால் ஒரு படைப்பாளி இருக்கிறார், அவருக்கும் தனிப்பட்ட கருத்துகள் மற்றும் அரசியல் சார்புகள் இருக்கக்கூடும் அத்துடன் குறித்த கலைஞர் தனது கார்ட்டூனை அவதானிக்கும் பார்வையாளர்களை பாதிக்க விரும்புகிறார் என்பதை முன்னிலைப்படுத்துங்கள்.

**3வது படிமுறை:** சின்னங்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்களை கேள்வி கேட்க மாணவர்களை ஊக்குவிக்கவும். கிரீடம், கண்டியன் உடை மற்றும் யானை ஆகியவை அரசாட்சியை அடையாளம் காணும் வரை எதைக் குறிக்கின்றன என்பதைப் பற்றி சிந்திக்கச் சொல்லுங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமருக்கும் மன்னருக்கும் இடையிலான வேறுபாடுகள் மற்றும் ஒற்றுமைகளைப் பற்றி விவாதிக்கவும். தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளை அரச குடும்பமாகப் பார்க்கும்போது ஏற்படக்கூடிய சாத்தியமான சிக்கல்களைப் பற்றி விவாதிக்கவும்.

**சின்னங்கள** என்பவை சிக்கலான கருத்துக்களையும் சுருக்கக் கருத்துக்களையும் விரைவாகவும் எளிதாகவும் அடையாளம் காணக்கூடிய வகையில் வெளிப்படுத்தும் காட்சி கூறுகளாகும். பெரும்பாலும் கண்ணைக் கவரும், நகைச்சுவையான அல்லது சர்ச்சைக்குரியவை, அவை பார்வையாளரை ஈடுபடுத்தி படத்தை நெருக்கமாக ஆராய ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருக்கும். சின்னங்கள் தீவிரமான கருத்துக்கள் அல்லது பிரச்சினைகளை தெளிவாகக் குறிப்பிடுவதன் மூலம் வலுவான உணர்ச்சிபூர்வமான பதில்களைத் தூண்டலாம். அவை பெரும்பாலும் பல்வேறு நிலைகளில் செயல்படுகின்றன, குறிப்பாக மற்ற சின்னங்களுடன் இணைந்தால் அது முன்வைக்கும் கருத்துகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் உதாரணமாக, ஒரு சிங்கத்தின் உருவம் தேசபக்தியைத் தூண்டக்கூடும், ஆனால் ஒரு கண்ணாடியின் முன் வைக்கப்படும்போது, அது பார்வையாளரை தேசபக்தியின் தன்மையைப் பற்றி சிந்திக்கத் தூ ண்டுவதாக அமைகின்றது எனவே, ஒரு சின்னத்தை அதைச் சுற்றியுள்ள பிற பொருள்கள் மற்றும் சின்னங்களுடன் ஒப்பிடும்போது கவனமாக கவனம் செலுத்துவது முக்கியமாகும். பல்வேறு வகையான சின்னங்கள் உள்ளன:

**தேசிய சின்னங்கள்:** தேசியக் கொடிகள், சின்னங்கள் அல்லது அடையாளங்கள் தேசங்கள் அல்லது நாடுகளைக் குறிக்கின்றன. உதாரணமாக, ஒரு அரசியல் கார்ட்டூனில் இலங்கைக் கொடி தேசபக்தி அல்லது தேசிய அடையாளத்தைக் குறிக்கலாம்.

**அரசியல் சின்னங்கள்:** இந்த சின்னங்கள் குறிப்பிட்ட அரசியல் சித்தாந்தங்கள், கட்சிகள் அல்லது இயக்கங்களுடன் தொடர்புடையவை மற்றும் அரசியல் செய்திகளை வெளிப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு சிங்கம் சிங்கள மக்களின் அரசியல் நலன்களைக் குறிக்கலாம்.

**வரலாற்று சின்னங்கள்:** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் கடந்த கால நிகழ்வுகள் அல்லது சித்தாந்தங்களைக் குறிக்கின்றன. உதாரணமாக, ஒரு சிம்மாசனம் அல்லது கிரீடம் அரசாட்சியைக் குறிக்கலாம்.

**கலாச்சார சின்னங்கள்:** இந்த சின்னங்கள் கலாச்சார மரபுகள், பழைமைவாத அல்லது சின்னங்களிலிருந்து பெறப்பட்டு கலாச்சார வர்ணனை அல்லது விமர்சனத்தை வெளிப்படுத்துகின்றன. அவற்றில் மதப் படங்கள், கலாச்சார கலைப்பொருட்கள் அல்லது சில இனக்குழுக்களுடன் தொடர்புடைய பழைமைவாதத்தை முன்வைப்பதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு கதாபாத்திரத்தின் உடை, அந்த உருவம் தொடர்புடைய கலாச்சாரத்தின் வகையை வெளிப்படுத்தலாம்.

## பணி 3: காட்சிப்படத்தின் விளக்கத்தை கற்றுக்கொள்ளல்.

**1வது படிமுறை:** படத்திற்கான விளக்கத்தை அவதானிக்காமல் குறித்த கேலிச்சித்திரம் தெளிவாக உள்ளதா என்று விவாதிக்க மாணவர்களைக ஊக்குவிக்கவும். குறிப்பாக குறித்த கேலிச்சித்திரத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்கள் கொண்டாடப்படுகின்றாரா? அல்லது விமர்சிக்கப்படுகின்றாரா என்ற இருதரப்பட்ட கண்ணோட்டங்களுக்கும் பதில்களைச் சேகரிக்கவும்: கொண்டாடப்படுகிறார் என்பதை உணர்த்தும் வகையிர் அவர் ஒரு யானை மீது அரச உடையில் பவணி வருவது வெற்றியைக் குறிக்கிறது. விமர்சிக்கப்படுகின்றாரா என்பதை உணர்த்தும் வகையில் குறித்த கேலிச்சித்திரத்தில் அவர் ஒரு ராஜாவைப் போல தோற்றமளிக்கும் அதே வேளையில் சாதாரண மக்கள் அவருக்குக் கீழே காட்டப்படுகிறார்கள். கார்ட்டூன்கள் கலவையான அர்த்தங்களைக் கொண்டிருக்கலாம் என்பதையும், ஒரு படம் உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதைத் தீர்மானிப்பது கடினமான விடயமாக அமையுமென்பதையும் முன்னிலைப்படுத்துங்கள். அதன் பின் 6வது கேள்வி க்கு பதிலளிக்க மாணவர்களை ஊக்குவிக்கவும்.


**2வது படிமுறை:** வெவ்வேறு அர்த்தங்கள் பற்றிய நமது முந்தைய விவாதத்தின் அடிப்படையில், கார்ட்டூனிஸ்டுகள் தங்கள் கார்ட்டூன்களின் விளக்கத்திற்கு வழிகாட்ட தலைப்புகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆராய்வோம். கார்ட்டூனுக்கு மேலேயும் கீழேயும் வைக்கப்பட்டுள்ள தலைப்புகள், கார்ட்டூனிஸ்ட் விரும்பும் செய்தியை வாசகர்கள் புரிந்துகொள்வதை உறுதிசெய்ய உதவுகின்றன. நீங்கள் இரண்டு தலைப்புகளையும் படிக்கும்போது, அவர்கள் என்ன பரிந்துரைக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள். கார்ட்டூனிஸ்ட் வெற்றியைக் கொண்டாடுகிறார் என்பதை பலர் சுட்டிக்காட்டுவார்கள். தலைப்புகள் எவ்வாறு வாசகரின் கவனத்தைத் திருப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதை இது காட்டுகிறது. இருப்பினும், ஒவ்வொரு கார்ட்டூனிலும் இது எப்போதும் நடக்காது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## விருப்பத்துக்குரிய செயல்பாடு

கீழே உள்ளதைப் போன்ற ஒரு அட்டவணையை தயார் செய்துகொள்ள ஆசிரியரொருவர் மாணவர்களுடன் இணைந்து பணியாற்றலாம். ஆசிரியர்கள் குறித்த பாடத்தில் ஏனைய அலகுகளில் முதன்மை மூல பகுப்பாய்வைப் பயிற்சிகளை முன்னெடுத்தால், இந்தச் செயல்பாடு காட்சித் திறன்களை பரந்த வரலாற்று பகுப்பாய்வுத் திறன்களுடன் இணைக்க உதவும்.

இந்த முறை, முழுமையான பகுப்பாய்வு எவ்வாறு குறிப்பிடத்தக்க அளவு தகவல்களை வெளிப்படுத்தலாம் அல்லது முதன்மை மூலத்தைப் பற்றிய நன்கு அறியப்பட்ட நுண்ணறிவுகளை வழங்க முடியும் என்பதைப் பற்றி சிந்திக்க மாணவர்களை ஊக்குவிக்கிறது.

| | |
|---|---|
| **தோற்றம்** | |
| **வரலாற்று சூழல்** | |
| **கண்ணோட்டம்** | |
| **பார்வையாளர்கள்** | |
| **நோக்கம்** | |




**மூலப்படம் A**

1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி தினமின பத்திரிகையில் வெளியான கேலிச்சித்தரம்.

# செயற்பாட்டு படிவம் -
# செயன்முறை படிவம் - பாடம் 1: பகுதி A

1) குறித்த கேலிச்சித்திர மூலாதாரமானது எப்போது? எந்த செய்தித்தாளில் வெளியாகியது ?

2) கார்ட்டூனில் உள்ள அனைத்து உருவங்கள் மற்றும் பொருட்களின் பட்டியலை உருவாக்கவும்.

3) மைய உருவம் மற்றும் கீழ் பகுதியில் காணப்படும் உருவங்களின் நிலைப்பாடு அவற்றுக்கிடையில் காணப்படும் உறவைப் பற்றி என்ன கூறுகிறது? கார்ட்டூனிஸ்ட் என்ன செய்தியை தெரிவிக்க முயற்சிக்கிறார்?

4) உங்கள் பாடப்புத்தகத்தில் காணப்படும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் படத்துடன் அந்த உருவத்தை ஒப்பிடுக. கார்ட்டூனில் காணப்படும் புகைப்படத்திலிருந்து எந்த அம்சங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன?

5) மூலத்தைப் புரிந்துகொள்ள 1956 இன் கால சூழலை நாம் புரிந்து கொள்ள வேண்டும்?

……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………

6) திரு. பண்டாரநாயக்க மற்றும் 1956 தேர்தல் பற்றி கார்ட்டூனிஸ்ட் எவ்வாறான நுண்ணறிவு பூர்வ கருத்துகளை வழங்குகிறார்?

……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………

7) தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரநிதியாகிய பண்டாரநாயக்கவை ஒரு மன்னரின் உடையில் சித்தரிப்பது பொருத்தமானதா?

……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………

8) தலைப்புகள் மற்றும் விளக்கத்தை படிக்காமல், கேலிச்சித்திரத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவைக் கொண்டாடுகிறார் அல்லது விமர்சிக்கிறார் என்பதை நீங்கள் நினைக்கிறீர்களா? அவரது உடை, சட்டகத்தில் அவரது உருவத்தின் இடம் மற்றும் பிற நபர்களின் நிலை ஆகியவற்றைக் கவனியுங்கள்.

……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………

9) 9) தலைப்பு மற்றும் படவிளக்கம் என்ன சொல்கிறது என்பதைச் சுருக்கமாகக் கூறுங்கள். கார்ட்டூனிஸ்ட்டின் மூலத்தைப் பற்றிய விளக்கத்தை இது எவ்வாறு விளக்குகிறது?

……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………………

# பாடத் திட்டம் 1: பகுதி B
# (ஒரு மணி நேரம்)

இந்தப் பாடம் முந்தைய பாடத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது காட்சி பகுப்பாய்வு திறன்களை மதிப்பாய்வு செய்து ஒரு உருவகத்தின் கருத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படாத இயக்கத்தின் வரம்புகளைப் பற்றி விவாதிக்க பாடப்புத்தகத்தின் நேர்மறையான கருத்துகளை ஆசிரியர்கள் மத்தியில் ஊக்குவிக்கிறது. பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படாத செயற்பாட்டின் வரம்புகளைப் பற்றி விவாதிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

S W R D பண்டாரநாயக்காவின் தேர்தல் வெற்றிக்கான வெவ்வேறு எதிர்வினைகளை ஒப்பிடும் இரண்டு கார்ட்டூன்களை (கேலிச்சித்திரங்களை) ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் பயிற்சிக்காக அளிக்கலாம். குறித்த இரண்டு கார்ட்டூன்களும் ஒரே நாளில் வெவ்வேறு செய்தித்தாள்களில் வெளிவந்தன, இதுதொடர்பான கருத்து வேறுபாடுகளை உடனடியாக பிரதிபலிக்கிறது. பாடத்திட்டத்தில் கற்பிக்கப்படுவது மட்டுமல்லாமல், வரலாறு என்பது பல்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளது என்பதை இந்தப் பாடம் எடுத்துக்காட்டுகிறது. இந்த வெவ்வேறு பார்வைகளைப் புரிந்துகொள்ள அரசியல் கார்ட்டூன்கள் நமக்கு உதவியாக அமைகின்றன. இன்றைய அரசியல் பிரச்சினைகளுக்கு பழங்குடி கலாச்சாரம் தீர்வுகளைக் கொண்டுள்ளது என்று மாணவர்கள் நம்புகிறார்களா என்பதை பயிற்றுனர்கள் விவாதிக்கலாம். ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தை முன்வைப்பது மாத்திரமின்றி, குறித்த கார்ட்டூன்களால் எழுப்பப்படும் கேள்விகளைப் பற்றி விமர்சன ரீதியாக சிந்திக்க மாணவர்களை ஊக்குவிப்பது முக்கியமான விடயமாகும்.

### பணி 1: கேலிச்சித்திரம் மற்றும் அதன் ஆக்க அமைவினை அடையாளம் காணும் திறன்களை மேம்படுத்தல்

**1வது படிமுறை: பகுப்பாய்விற்குத் தயாராகுதல்**

மாணவர்கள் 1வது கேள்விக்கு சுயாதீனமாக பதிலளிக்க ஆசிரியர்கள் அவர்களை ஊக்குவிக்கவும். ஒரு மூலத்தின் தலைப்பில் மற்றும் விளக்கத்தில் வழங்கப்பட்ட அடிப்படை விவரங்களை உன்னிப்பாகக் கவனிக்கும் நடைமுறையை ஊக்குவிப்பது அவசியம்.

**2வது படிமுறை: தனித்தனி கூறுகளைக் குறிப்பிடுதல்**

தொடர்புடைய தலைப்புகளைத் தவிர்த்து, காட்சிக் கூறுகளில் மாத்திரம் கவனம் செலுத்தி, மூலப்படமான B ஐ ஆய்வு செய்ய மாணவர்களை வழிநடத்துங்கள். செய்முறைப் படிவத்தில் காணப்படும் 2வது கேள்வி தொடர்பில் உரையாற்ற கார்ட்டூனில் சித்தரிக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் மற்றும் பொருட்களின் விரிவான பட்டியலை அவர்கள் தொகுக்க வேண்டும்.

**3வது படிமுறை: ஒரு கேலிச்சித்திரத்தை அடையாளங் காணல்**

மாணவர்கள் S.W.R.D. பண்டாரநாயக்கவை அடையாளங் காணும் ஒரு விவாதத்தை எளிதாக்குவது ஆசிரியரின் பொறுப்பாகும். இந்த காட்சிப்படத்தை அங்கீகரிக்க உதவும் பண்புகளை ஆராயுங்கள். இந்த விவாதத்தைத் தொடர்ந்து, மாணவர்கள் கேள்வி 3 க்கு பதிலளிப்பார்கள்.

**4வது படிமுறை: கூட்டமைவுகளை புரிந்துகொள்ளல்**

படத்தின் அமைப்பை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்ய மாணவர்களை ஊக்குவிக்கவும். விவரங்கள் மற்றும் புள்ளிவிவரங்களின் கவனம் செலுத்தி, மாணவர்கள் தமது அவதானிப்புகளை வெளிப்படுத்துவதன் மூலம் கற்றல் செயற்பாட்டை தொடங்கவும். "மைய நிலையை யார் வகிக்கிறார்கள்?" என்ற கேள்வியை அவர்களிடம் கேட்கவும். கூடுதல் சூழலுக்கு அவர்கள் லேபிள்களைப் பார்க்கலாம். அவர்களின் பதில்களைச் சரிபார்த்து, லேபிள்களின் விரிவான ஆய்வு பின்னர் வரும் என்று மாணவர்களுக்கு தெரிவிக்கவும். எனவே, படத்தில் யார் மையப்படுத்தப்பட்டுள்ளனர்? அது இலங்கையைக் குறிக்கும் ஒரு நோய்வாய்ப்பட்ட பெண்ணின் காட்சியானது முந்தைய பாடத்தில் உள்ளடக்கப்பட்ட காட்சி அமைப்பின் கொள்கைகளை அவர்களுக்கு நினைவூட்டுங்கள் - கார்ட்டூனிஸ்ட் அவளை மையப் புள்ளியில் நிலைநிறுத்த முடிவின் உட்பொருள் என்ன? உதாரணமாக, எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவை விட கார்ட்டூனிஸ்ட் தேசத்தின் சித்தரிப்புக்கு முன்னுரிமை அளிக்கிறார் என்பதை குறிப்பிடுகிறதா?

## பணி 2: லேபிள்கள் மற்றும் தலைப்புகளைப் படித்து ஒரு உருவகத்தைப் புரிந்துகொள்ளுதல்

**1வது படிமுறை:** படத்தில் உள்ள எழுத்துமூல உரையை கவனிக்குமாறு மாணவர்களை கேட்டுக்கொள்ளுங்கள். கார்ட்டூனிஸ்ட் தனது செய்தியை இன்னும் தெளிவாக வெளிப்படுத்த படத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எழுத்துமூல உரையை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். கார்ட்டூனிஸ்ட் படத்தை எவ்வாறு உருவமைக்க விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ள இந்த தலைப்பு எவ்வாறு உதவியது என்பதைப் பற்றி விவாதிக்கவும். பின்னர் மாணவர்களின் கவனத்தை “ளுறுசுனு பண்டா (ஆயுர்வேதம்)“ என்ற லேபிளுக்குத் அவதானத்தை திருப்புங்கள் - இந்தப் படம் பண்டாரநாயக்கவை ஆயுர்வேதத்துடன் எவ்வாறு தொடர்புபடுத்துகிறது என்பதைப் பற்றி விவாதிக்கவும். இந்த கட்டத்தில், ஸ்வபாஷா இயக்கத்தின் சூழலையும், பூர்வீகக் கருத்துகளும் நடைமுறைகளும் நாட்டின் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வுகளை வழங்கும் என்ற கருத்தை பண்டாரநாயக்க எவ்வாறு ஊக்குவித்தார் என்பதையும் ஆசிரியர் விளக்க வேண்டும். இந்த கருத்துகளானது, 9 மற்றும் 11 ஆம் வகுப்பு பாடப்புத்தகங்களில் உள்வாங்கப்பட்டுள்ளது.

**2வது படிமுறை:** படுக்கைக்கு அடுத்த அலமாரியில் “மேற்கத்திய மருத்துவம்“ என்று ஏன் எழுதப்பட்டுள்ளது என்று மாணவர்களிடம் கேளுங்கள். “அன்னை லங்கா“ சிகிச்சை என்ன முறைகள் பயன்படுத்தப்படவில்லை என்பது பற்றி அது என்ன சொல்கிறது. மாணவர்களுக்கு கலவை பற்றி நினைவூட்ட இது ஒரு வாய்ப்பு - “ஆயுர்வேதம்“ மற்றும் “மேற்கத்திய மருத்துவம்“ என்ற லேபிள்களை வைப்பது கார்ட்டூனிஸ்ட் என்ன நோக்கமாகக் கொண்டுள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு எவ்வாறு உதவுகிறது. 6வது கேள்விக்கு பதிலளிக்க மாணவர்களிடம் கேளுங்கள்.

**3வது படிமுறை:** மாணவர்களுக்கு ஒரு உருவகம் என்றால் என்ன என்பதைப் பற்றி விளக்குங்கள். குறித்த மூலப்படத்துக்கு அமைவாக இந்த உருவகமானது நாட்டை ஒரு நோய்வாய்ப்பட்ட பெண்ணாக சித்தரிக்கப்படுகின்றது. அதேவேளைபுதிய பிரதமர் இரண்டு சிகிச்சைகளுக்கு இடையில் முடிவு செய்யும் மருத்துவராக செயல்படுவதாக அடையாளப்படுத்துவதோது இந்த படத்தை வரைந்த கார்ட்டூனிஸ்ட் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தேர்தலைக் கொண்டாடத்துக்குரிய விடயமாக கருதவில்லையென்பது தெளிவாகிறது. அதற்கு பதிலாக, புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் செயல்படுமா என்பது பற்றிய முக்கியமான கேள்வியை அவர் எழுப்புகிறார். கார்ட்டூனில் காணப்படும் மருத்துவர் நோயாளியிடம் கேள்விகள் கேட்பதையும், மருந்துப் பையை எடுத்துச்

செல்வதைப் போன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடயம் குறிப்பிட்ட கருத்தினை வெளிப்படுத்த உதவுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் 7 ஆம் கேள்விக்கு பதிலளிக்க வேண்டும்.

**உருவகம்** : என்பது இரு வெவ்வேறு விடயங்களை ஒப்பிட்டுப் பேசும் ஒரு வழியாகும், இதில் ஒன்று அல்லது இரண்டையும் பற்றிய ஆழமான அர்த்தத்தை எடுத்துக்காட்டுகின்றன. அரசியல் கேலிச்சித்திரங்கள் மிகவும் சிக்கலான அரசியல் தலைப்புகளை ஒரு சக்திவாய்ந்த காட்சிப்படமாக மாற்ற உருவகங்கள் பயன்படுத்துகின்றன. இந்த உருவகங்கள் பெரும்பாலும் பெரிய அரசியல் கருத்துக்களைக் குறிப்பிட்டு காண்பிக்க பல அடையாள சின்னங்கள் பயன்படுத்துகின்றன. உதாரணமாக, ஒரு நாட்டை அதன் தலைவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறிக்க கரடுமுரடான கடலில் ஒரு கப்பலாகக் காட்டலாம். சிக்கலான விவரங்களை வெளிப்படுத்த சின்னங்களின் சிறிய பகுதிகள் முக்கியமாக பார்க்கப்படுகிறது. எனவே இந்த விவரங்களும் உருவகத்தின் முக்கிய யோசனையும் எவ்வாறு ஒன்றாகச் செயல்படுகின்றன என்பதை மாணவர்கள் கவனிக்க வேண்டும். உதாரணமாக, நாடொன்றை கப்பலாக சித்தரித்துக் காட்டப்பட்டால், கிழிந்த பாய்மரங்கள் உடைந்த மேலோட்டத்திலிருந்து வேறுபட்ட ஒன்றைக் குறிக்கும். அரசியல் கார்ட்டூன்கள் பெரும்பாலும் விஷயங்களை கேலி செய்வதற்காகவே வடிவமைக்கப்படுவதால், அவற்றில் உள்ள உருவகங்கள் பொதுவாக நையாண்டியுடன் மிகைப்படுத்தப்படுகின்றன.

**விருப்பத்துக்குரிய செயல்பாடு**

கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற ஒரு அட்டவணையை நிரப்ப மாணவர்களை ஊக்குவிக்கவும். இந்தப் கற்றல் செயற்பாடானது மாணவர்கள் தாங்கள் பெற்ற திறன்களை சுயாதீனமாகப் பயன்படுத்த அனுமதிக்கும் ஒரு சவாலை வழங்குகிறது. மேலும், எந்தவொரு முதன்மை மூலப் பயிற்சிக்குப் பிறகும் மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு தரப்படுத்தப்பட்ட கருவியை இது வழங்குகிறது, இது அவர்களுக்கு அத்தியாவசிய திறன்களைப் பயிற்சி செய்யவும், காலப்போக்கில் அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைப் பற்றி சிந்திக்கவும் உதவுகிறது.

## பணி 4: கேலிச்சித்திரங்களை ஒப்பீட்டு பகுப்பாய்வு செய்தல்


**1வது படிமுறை:**

இரண்டு கேலிச்சித்திரங்கள் பத்திரிகையில் பிரசுரமான திகதிகளை மாணவர்கள் ஆய்வு செய்ய அறிவுறுத்துங்கள், இரண்டும் ஒரே நாளில் வெளியிடப்பட்ட கேலிச்சித்திரங்களாகும். ஆனால் வெவ்வேறு செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட காட்சிப்படங்களாகும் என்பதை வலியுறுத்துங்கள். விருப்ப செயல்பாட்டு அட்டவணைகளில் ஈடுபட்டவர்களுக்கு, இரண்டு கார்ட்டூன்களின் முந்தைய பகுப்பாய்வுகளை சரிசெய்ய அவர்களைத் தூண்டவும். மாணவர்கள் தங்கள் ஆய்வு குறித்து ஒப்பீட்டு பகுப்பாய்வை முறையாக ஒழுங்கமைக்க செயற்பாட்டு படிவமொன்றைப் போன்ற ஒரு கட்டமைக்கப்பட்ட அட்டவணையைப் பயன்படுத்த வேண்டும்.

**2வது படிமுறை**

ஒவ்வொரு கார்ட்டூனிலும் வழங்கப்படும் மாறுபட்ட விளக்கங்கள் குறித்த விவாதத்தை எளிதாக்குங்கள். மாறுபட்ட செய்திகளை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் தனித்துவமான நுட்பங்களில் கவனம் செலுத்துங்கள். ஒப்பீட்டு நோக்கங்களுக்காக முன்னர் பகுப்பாய்வு செய்யப்பட்ட கார்ட்டூன்களைப் பயன்படுத்துவது நடைமுறை

பயன்பாடு மூலம் மாணவர்களின் புரிதலை வலுப்படுத்தும். மாணவர்கள் தங்கள் பாடப்புத்தகங்களைக் குறிப்பிட ஊக்குவிக்கவும், இரண்டு கார்ட்டூன்களின் இந்த ஒப்பீட்டு காட்சி பகுப்பாய்வு எவ்வாறு குறிப்பிடப்பட்ட வரலாற்று சூழலின் புரிதலையும் கருத்தியல்மயமாக்கலையும் மேம்படுத்தியுள்ளது என்பதைப் பற்றி சிந்திக்கவும். மாணவர்கள் தங்கள் நுண்ணறிவுகளை ஒருங்கிணைப்பதற்கான ஒரு வழிமுறையாக கேள்வி 8 க்கு பதிலளிக்க ஊக்குவிக்கவும்.




**மூலப்படம் B**

1956 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ம் திகதி சிலோன் ஒப்சேவர் நாளிதழில் வெளியான கேலிச்சித்திரம்.

# செயல்பாட்டுப் படிவம்
# பாடம் 1 - பகுதி B

1. இந்த காட்சி ஆதாரமானது வெளியிடப்பட்ட செய்தித்தாளின் பெயரையும் குறித்த செய்தித்தாள் வெளியீட்டு செய்யப்பட்ட திகதியையும் கண்டறிய முயற்சி செய்யவும். தேதியையும் கண்டறியவும்.

..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................

2. கார்ட்டூனில் காட்டப்பட்டுள்ள அனைத்து நபர்கள் மற்றும் பொருட்களின் முழுமையான பட்டியலை உருவாக்கவும்.

..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................

3. “கேலிச்சித்திரம்” என்றால் என்ன என்பதை விளக்குங்கள். S W R D பண்டாரநாயக்காவை அடையாளம் காணக்கூடியதாக, இந்த ஓவியக் கலைஞர் (கார்ட்டூனிஸ்ட்) அவரது ஆக்கத்தின் வாயிலாக எவ்வறான அம்சங்களை குறிப்பிட்டு முன்னிலைப்படுத்துகிறார்?

..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................

4. குறித்த கார்ட்டூனிஸ்ட் தனது கேலிச்சித்திரத்தின்ெ மூலமாக பெண்ணின் படத்தை கேலிச்சித்திரத்தின் மையத்தில் ஏன் வைத்தார் என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................

5. லேபிள்கள் மற்றும் கேலிச்சித்திரத்தில் காணப்படும் பெண்ணின் நிலைப்பாட்டின் அடிப்படையில், குறித்த கார்ட்டூனிஸ்ட் தனது பார்வையாளர்களுடன் எவ்வாறாக செய்தியைப் பகிர்ந்து கொள்கிறார்?

.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................

6. உங்கள் பாடப்புத்தகத்தில் விவாதிக்கப்பட்டபடி எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க செயல்படுத்திய கொள்கைகளைப் பாருங்கள். “ஆயுர்வேதம்” மற்றும் “மேற்கத்திய மருத்துவம்” என்ற லேபிள்களைப் கார்ட்டூனிஸ்ட் பயன்படுத்துவதை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த சூழல் பார்வையாளர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றது?

.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................

7. S W R D பண்டாரநாயக்காவை விவரிக்கும் வகையில் தேர்தல் குறித்து கார்டூனிஸ்டின் கருத்துக்களை மதிப்பிடுங்கள். கார்ட்டூனிஸ்ட் தங்கள் கருத்தை வெளிப்படுத்த எவ்வாறான உருவகக் கூறுகளை பயன்படுத்துகிறார்?

.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................

| | மூல ஆதாரம் A | மூல ஆதாரம் B |
|---|---|---|
| குறித்த நாளிதழை வெளியீடு செய்த வெளியீட்டாளர்கள் மற்றும் வெளியீடு செய்யப்பட்ட திகதி | | |
| குறித்த கார்டூனிஸ்ட்டினால் முன்வைக்கப்பட்ட பிரதான கருத்துகள் | | |
| குறித்த கார்டூனிஸ்ட் தனது பிரதான கருத்துகளை முன்வைப்பதற்கு கையாண்ட முறைகள் | | |

8. இரண்டு கார்ட்டூன்களிலும் காட்டப்பட்டுள்ள கண்ணோட்டங்களில் உள்ள வேறுபாடுகள் என்ன? இந்த வேறுபாடு, S W R D பண்டாரநாயக்காவின் தேர்தல் தொடர்பாக பாடப்புத்தகத்தில் வழங்கப்பட்ட தகவல்களைப் பற்றிய நமது புரிதலை எவ்வாறு மேம்படுத்துகிறது?

.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................

**மேலதிக பரிந்துரைகள்**

இந்த இரண்டு பாடங்களும் ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறையில் முன்னெடுக்கக் கூடிய படிப்படியான திட்டங்களை உருவாக்க ஒரு மாதிரியாகச் செயல்பட வேண்டும்.

முக்கிய குறிப்புகள் பின்வருமாறு:

1. மேலே விவாதிக்கப்பட்ட முதன்மை திறன்களாக காட்சி பகுப்பாய்வு செயல்முறையை உடைக்கவும்.
2. மாணவர்கள் தங்கள் வரலாற்று பாடத்திட்டத்தில் மிகவும் ஆழமான ஈடுபாட்டை ஈடுபட அனுமதிக்கும் படங்களை மாணவர்களுக்கு வழங்கவும்.
3. வழிகாட்டப்பட்ட சுயாதீன மாணவர் பிரதிபலிப்பு மற்றும் பணித்தாள்கள் மூலம் எழுதுதல் ஆகியவற்றுடன் ஆசிரியர் தலைமையிலான விவாதங்களை இணைக்கவும்.
4. மாணவர்கள் தங்கள் கற்றலை அன்றாட வாழ்க்கையில் ஒருங்கிணைக்க உதவும் வகையில் முக்கிய காட்சித் திறன்களை பல முறை மீண்டும் செய்யவும்.

அதிக கவனம் செலுத்தும் பாடங்களை உருவாக்க ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய பல ஒத்த பயிற்சிகள் தொடர்பான விபரங்கள் ஆன்லைனில் கிடைக்கின்றன. இருப்பினும், சிங்களம் மற்றும் தமிழில் குறித்த காட்சிப்படங்களை பெற்றுக்வதில் சற்று சிரமம் காணப்படுவதால், ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தப் பயிற்சிகளை மாற்றியமைக்க வேண்டும், மேலும் அவற்றை வரலாற்று பாடத்திட்டத்துடன் ஆசிரியர் சீரமைக்க வேண்டும். Historiana.eu இல் தொகுக்கப்பட்டு கிடைக்கும் அரசியல் கார்ட்டூன்கள் போன்றவை இந்த நோக்கத்திற்காக ஒரு வசதியான ஆதாரமாக செயல்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.